டிரஸ்ட் ஆரம்பித்திட...
புதிதாக டிரஸ்ட், பவுண்டேஷன், கட்சி, ஆசிரமம், சங்கம், மன்றம், கழகம் பதிவு செய்திட தொடர்பு கொள்ளவும்.
பகவான் பவுண்டேஷன்
96004 02096

நல்லவே எண்ணல் வேண்டும்... எண்ணிய முடிதல் வேண்டும்...

# சக்கர வியூகம்

தினசரி நாளிதழ் "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" DAILY NEWS PAPER
★SAKKRA VIYUGAM★

இணையத்தில் வாசிக்க..,

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 135 | 09.11.2025 | SUNDAY | IPPASI : 22 | PRICE : RS.5/-
மலர் : 01 | இதழ் : 135 | 09.11.2025 | ஞாயிற்றுக்கிழமை | ஐப்பசி : 22 | விலை : ரூ.5/-

3 திண்டுக்கல் இருப்புப்பாதை காவல் சோதனை நடத்தியதில், சுமார் 06 கிலோ கஞ்சா பறிமுதல்

4 சொந்த கட்சியினரால் அல்லது மக்களால் திமுக அழியும்: தமிழிசை சவுந்தரராஜன் விமர்சனம்

2 திமுகவினர் பணம் சம்பாதிக்க மட்டுமே பயன்படுகிறது அறநிலையத் துறை: அண்ணாமலை குற்றச்சாட்டு

# "தேர்தல் ஆணையம் மூலமாக குறுக்கு வழியில் திமுகவை வீழ்த்த முயற்சி"




சென்னை: நவ.9-

"கொள்கை ரீதியாக திமுகவை வீழ்த்த முடியாததால், தேர்தல் ஆணையம் மூலமாக, குறுக்கு வழியில் வீழ்த்த முடியுமா என்று முயற்சி செய்கிறார்கள், அதுதான், சார் (ஷிமிஸி)" என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இளைஞரணி சார்பில் வள்ளுவர் கோட்டத்தில் நடைபெறும் "திமுக 75 ஸ்ரீ அறிவுத்திருவிழா" நிகழ்வைத் முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்து "காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு ஸ்ரீ திமுக 75" நூலை வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றினார்.

அப்போது அவர் பேசும்போது, " திமுகவின் 75 ஆண்டுகள் பயணத்தை நினைவுகூரும் இந்த விழாவுக்கு, "அறிவுத் திருவிழா" என்று உதயநிதி பெயர் வைத்திருக்கிறார். இதைவிடப் பொருத்தமான தலைப்பு வேறு இருக்க முடியாது என்றுதான் சொல்ல வேண்டும். இந்த அறிவுத் திருவிழாவை இத்தோடு நிறுத்தி விடாமல், தொடர்ந்து ஆண்டுதோறும் நீங்கள் நடத்திட வேண்டும் என்று அவருக்கு நான் கோரிக்கை வைக்கிறேன்.

முழுக்க முழுக்க சாமானியர்களால் தொடங்கப்பட்டு, 1967ல் முதல் மாநிலக் கட்சியாக ஆட்சியைப் பிடித்து சாதனை படைத்த கழக வரலாற்றை, இன்று வரை மீண்டும் மீண்டும் பல்வேறு கோணங்களில், பல ஆய்வாளர்கள் ஆர்வத்துடன் ஆராய்ச்சி செய்து கொண்டே இருக்கிறார்கள். 'ஏதோ கட்சியைத் தொடங்கினோம், அடுத்த முதலமைச்சர் நான்தான்' என்று அறிவித்தோம் என்று நாம் ஆட்சிக்கு வரவில்லை.

கழகத்தின் தலைவர்களில் இருந்து, கடைக்கோடித் தொண்டர் வரை, சுற்றிச் சுழன்று பணியாற்றினார்கள். 18 ஆண்டுகள் உயிரைக் கொடுத்து ஒவ்வொருவரும் உழைத்தார்கள். சமூகத்தில் சரிபாதி மக்கள் படிப்பறிவு கூட இல்லாமல் இருந்த காலத்தில், குக்கிராமத்தில் இருக்கும் முடிதிருத்தும் சலூன் கூட மக்களின் சிந்தனையைத் திருத்தும் மையமாக செயல்பட்டது.

சைக்கிள் கடை, டீக்கடை என்று ஒரு இடம் விடாமல், திராவிட இயக்க இதழ்களை ஒரு திமுககாரர் வாசிக்க, அவரைச் சுற்றி பத்து பேர் செவி வழியாகக் கேட்டு உலக வரலாற்றைத் தெரிந்து கொண்டார்கள். கிராமத்தில் இருக்கிறவர்களும் கியூபா புரட்சியை தெரிந்து வைத்திருந்தார்கள். ரஷ்யப் புரட்சியைப் பற்றி படித்து, ஊக்கமும் உறுதியும் பெற்றார்கள். இவ்வாறு நாம் பெற்ற வெற்றி என்பது இனி யாரும் படைக்க முடியாத வரலாற்றுச் சாதனை.

இந்த வரலாறு பற்றியெல்லாம் தெரியாத சிலர், நம்மை மிரட்டிப் பார்க்கிறார்கள். இன்னும் சில அறிவிலிகள் திமுகவைப் போலவே வெற்றி பெறுவோம் என்று பகல் கனவு காண்கிறார்கள். திமுகவைப் போன்று வெற்றி பெற, திமுகவைப் போன்று உழைப்பும், அறிவும் தேவை. ஒரு சூரியன். ஒரு சந்திரன். ஒரு திமுக தான். இனி இப்படியொரு இயக்கம் இந்த மண்ணில் தோன்ற முடியாது.

இந்த வரலாற்றையும் நம்முடைய கொள்கைகளையும் உதயநிதி இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்த்ததால்தான், இளைஞரணிச் செயலாளராக அவர் பொறுப்பேற்றதில் இருந்து, லட்சக்கணக்கான இளைஞர்களை கழகத்துக்குள் கொண்டு வந்திருக்கிறார். இன்றைக்கு வெளியிடப்பட்டிருக்கும், "காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு" புத்தகத் தலைப்பிலேயே, நம்முடைய இயக்கம் எத்தகைய மாபெரும் அறிவுக் கருவூலமாக கொள்கை தீரர்களின் கோட்டமாக இருக்கிறது என்று வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

இந்த நேரத்தில், இளைஞரணியினருக்கு நான் ஒரு கோரிக்கை வைக்க விரும்புகிறேன்... இந்தப் புத்தகத்தில் இருக்கும் கட்டுரைகளை, காலத்திற்கு ஏற்ற மாதிரி, வீடியோக்களாக மாற்றி, சோஷியல் மீடியாவில் அனைத்து இளைஞர்களுக்கும் கொண்டு சேர்க்க வேண்டும்!

நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், சோனியா காந்தி முதல் அகில இந்தியத் தலைவர்கள் அனைவரும், தங்கள் பார்வையில் நம்மை அளவிட்டு எழுதியிருக்கிறார்கள். ஒரு மாநிலக் கட்சியை, அகில இந்தியத் தலைவர்களும், மற்ற மாநிலத் தலைவர்களும் புகழ்ந்து எழுதுவது சாதாரணமாக நடந்துவிடாது.

இப்படி, இந்தியாவே போற்றும் இயக்கமாக நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் வளர்ந்திருக்கிறது. இந்தச் சாதனைகளும் வளர்ச்சியும்தான் பலரின் கண்களை உறுத்துகிறது. நாம் பேசும், சமூகநீதி சுயமரியாதை மாநில சுயாட்சி கூட்டாட்சி ஆகிய கருத்துகள் இன்றைக்கு இந்தியா முழுமைக்கும் பரவி விட்டது! "என்னடா இவர்களைத் தமிழ்நாட்டிலேயே முடக்க நினைத்தால், இந்தியா முழுவதும் தாக்கத்தை ஏற்படுத்துகிறார்களே" என்று கோபப்படுகிறார்கள்.

எனவே, நான் பெருமையுடன் சொல்கிறேன். இந்த அறிவுத் திருவிழா, "திராவிடம் வெல்லும், அதைக் காலம் சொல்லும்!" என்று முழங்கும் திருவிழா.

இங்கு இருக்கும் இளைஞரணித் தம்பிமார்களைப் பார்க்கிறபோது, இது கூடிக் கலையும் கூட்டமாக இல்லாமல், காலந்தோறும் கொள்கைகளைக் கூர்தீட்டிக் கொள்ளும் கூட்டமாக இருப்பதால்தான், எத்தனை பெரிய எதிரிகள் வந்தாலும் எத்தனை பெரிய தந்திரங்களைக் கொண்டும் நம்மை வீழ்த்த முடியவில்லை என்று உணர்த்துகிறது. கொள்கை ரீதியாகத் திமுகவை வீழ்த்த முடியாததால், தேர்தல் ஆணையம் மூலமாக, குறுக்கு வழியில் வீழ்த்த முடியுமா என்று முயற்சி செய்கிறார்கள், அதுதான், சார்.

ஏன் இந்த சாரை அவசர அவசரமாக நடத்த வேண்டும்? தேர்தல் நெருக்கத்தில் குழப்பத்தை ஏற்படுத்தும் இது வேண்டாம் என்று அனைத்து அரசியல் கட்சிகளும் சொல்லியும், ஏன் நடத்த வேண்டும்? இதையெல்லாம் காது கொடுத்து கேட்காமல், தேர்தல் ஆணையம் சார் பணிகளை தொடங்கிவிட்டார்கள். இதற்கு எதிராகச் சட்டரீதியாகவும் ஸ்ரீ அரசியல்ரீதியாகவும் நாம் போராடிக்கொண்டிருக்கிறோம், தொடர்ந்து போராடப் போகிறோம், போராடுவோம், அது வேறு!

இந்த நேரத்தில், இளைஞரணியிடம் நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, களத்தில் வேலை செய்யும் நீங்கள், எந்தவொரு போலி வாக்காளரும் இடம்பெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்! உண்மையான நம்முடைய வாக்காளர்கள் விடுபடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். யாருடைய வாக்குரிமையும் பறிபோகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்காகக் களப்பணியாற்ற வேண்டும்.

நம் இயக்க வரலாறு முழுவதுமே போராட்ட வரலாறுதான். நம்முடைய போராட்ட வரலாற்றை நினைவூட்டும் கொள்கைத் திருவிழாதான், இந்த அறிவுத் திருவிழா. முற்போக்கு விழாவாக, கருப்பு சிவப்பு நீலம் சேர்ந்திருக்கும்போது எந்தக் காவியாலும் நம்மை எதுவும் செய்ய முடியாது.

இந்தியாவின் ஜனநாயகத்தையும் தமிழ்நாட்டின் எதிர்காலத்தையும் காக்க ஸ்ரீ 2019 முதல் தொடரும் நம்முடைய பயணம், 2026லும் மாபெரும் வெற்றியைப் பெறும்! "திராவிட மாடல் 2.0 ஆட்சி அமையும்" பெரியாரின் அண்ணாவின் தலைவர் கலைஞரின் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் கொள்கை வாரிசுகள் இருக்கும் வரை, தமிழ்நாடு தலைகுனியாது. தமிழ்நாடு போராடும். தமிழ்நாடு வெல்லும்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



■ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களை சென்னை, அண்ணா அறிவாலயத்தில், நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் பழங்குடியின தோடர் இனத்தை சேர்ந்த மாணவி செல்வி ஆர். நீத்துசின் அவர்கள், தோடர் சமுதாயத்தில் முதலாவதாக ழிணிணிஜி தேர்வில் தேர்ச்சி பெற்று, அரசு ஒதுக்கீட்டின் கீழ் எம்.பி.பி.எஸ். மருத்துவப் படிப்பிற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளதையொட்டி பெற்றோருடன் சந்தித்து வாழ்த்து பெற்றார். உடன் தமிழ்நாடு ஆதிதிராவிடர் பழங்குடியினர் நல ஆணையத்தின் உறுப்பினர் திரு. கோடநாடு மு. பொன்தோஸ் அவர்கள் உள்ளார்.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

அழையுங்கள்! வாசகர்களே!!
தங்கள் பகுதிகளில் நடக்கும் தாங்கள் காணும் விரும்பத்தகாத செயல்கள், அவலங்கள், சட்டத்திற்கு புறம்பான செயல்பாடுகள், பெண்களுக்கு எதிரான கொடுமைகள் மற்றும் சமூகத்தில் நடக்கும் தங்களால் தட்டிக் கேட்க இயலாத அநீதிகளை எங்களுக்கு உடனுக்குடன் தெரியப்படுத்தவும். (ரகசியம் பாதுகாக்கப்படும்)
(24 x 7)
88705 00000
sakkraviyugam2025@gmail.com

# ரெட்டியார்சத்திரம் ஒன்றிய குக்கிராமங்களிம் புதிய நியாய விலைக் கடைகளை திறக்க உத்தரவிட்ட அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு கிராம மக்கள் பாராட்டு

## ரெட்டியார் சத்திரம் ஒன்றியத்தில் ரூ. 52 லட்சம் மதிப்பில் நான்கு கிராம ஊராட்சிகளில் 5 புதிய நியாய விலைக்கடைகளை ஒன்றியசெயலாளர் மணி திறந்து வைத்தார்




சின்னாளபட்டி, நவ.9

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதியில் சுமார் 300 குடும்பதாரர்கள் வசிக்கும் பகுதியில்கூட புதிய நியாய விலைக் கடைகளை ஊரகவளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி திறந்து வைத்து வருகிறார். இதன் மூலம் கிராம மக்கள் எவ்வித சிரமும் இன்றி ரேசன் பொருட்களை வாங்கும் நிலை உருவாகி உள்ளது. ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்திற்கு உட்பட்ட வேலாம்பட்டி, ஆசாரிபுதூர், நடுப்பட்டி மற்றும் சில்வார்பட்டி ஊராட்சிக்குட்பட்ட கன்னிமானூத்து மற்றும் வெள்ளையம்பட்டியில் புதிய நியாய விலைக்கடைகள் திறப்புவிழா நடைபெற்றது. ரூ. 52 லட்சம்மதிப்பில்கட்டப்பட்ட 5 புதிய நியாய விலைக்கடைகள் திறப்பு விழாவிற்கு ரெட்டியார்சத்திரம் வடக்குஒன்றிய செயலாளர்மணி தலைமை தாங்கினார். ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கே.புதுக்கோட்டை ரமேஸ், முன்னாள் மாவட்டகவுன்சிலர் சுப்புலெட்சுமிசண்முகம், முன்னாள் ஒன்றிய துணைப் பெருந்தலைவர் ராஜேஸ்வரி தமிழ்ச்செல்வன், முன்னாள் ஊராட்சிமன்ற தலைவர்கள் முருநெல்லிக்கோட்டை சின்னு ஆகியோர் முன்னிலை வகித்தனர். சில்வார்பட்டி ஊராட்சிமன்ற முன்னாள்தலைவர் தனலெட்சுமிராமமூர்த்தி வரவேற்றுபேசினார். அனைத்து கடைகளையும் வடக்குஒன்றிய செயலாளர் மணி திறந்து வைத்து பயனாளிகளுக்கு ரேசன் பொருட்களை வழங்கினார். தங்கள் கோரிக்கையை ஏற்று புதிய நியாய விலைக்கடைகளை கட்டிக்கொடுத்த அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு கிராம மக்கள் மனதார பாராட்டும், நன்றியையும் தெரிவித்தனர். நிகழ்ச்சிகளில் கொத்தப்புள்ளி ஊராட்சிமன்ற முன்னாள் துணைத்தலைவர் எம்.வி. ரெங்கசாமி, ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் செல்வம், மாவட்ட பிரதிநிதிகள் இளங்கோ, தனசேகரன், மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் ஜி.நடுப்பட்டிதர்மராஜ், ராஜேந்திரன், பாபு,சிவகுமார், பொம்முராஜ், தேவராஜ், ரமேஸ், வேல்முருகன், முருகேசன், புனிதா, பாண்டியராஜன், ஊராட்சிமன்ற செயலாளர்கள் கே.புதுக்கோட்டைராஜேந்திரன், கர்ணன், வீரபாண்டி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# திமுகவினர் பணம் சம்பாதிக்க மட்டுமே பயன்படுகிறது அறநிலையத் துறை: அண்ணாமலை குற்றச்சாட்டு



சென்னை, நவ.09-

இந்து சமய அறநிலையத் துறை முழுக்க முழுக்க திமுகவினர் பணம் சம்பாதிக்க மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. ஆலய மேம்பாட்டுக்குப் பயன்படுத்தப்படுவது இல்லை என்று தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை குற்றம்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் தனது எக்ஸ் வலைதளப் பதிவில் கூறியுள்ளதாவது: ஈரோடு மாவட்டம் பவானி சங்கமேஸ்வரர் கோயில் மேற்கு மதில்சுவர் அருகே கோயில் நிர்வாகத்தால் அடையாளப்படுத்தப்பட்ட 3,150 சதுரஅடி பரப்பில், நவ.14ம் தேதி முதல் 2026 ஜன.12ம் தேதி வரை 60 நாட்களுக்கு தற்காலிக கடைகள் அமைத்து வியாபாரம் செய்து கொள்ளும் உரிமத்துக்கான டெண்டர் ரூ.16 லட்சத்துக்கு விடப்பட்டுள்ளது.

'ஏலம் எடுத்தவரே உரிமத்தை அனுபவிக்க வேண்டும். உள்வாடகைக்கு விட்டால், ஏலம் ரத்து செய்யப்படும்' என்று ஏல நிபந்தனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்த ஏலத்தைக் கைப்பற்றியுள்ள பவானி திமுக நகரச் செயலாளருக்கு வேண்டப்பட்ட திமுகவினர், இங்கு உள்ள 34க்கும் மேற்பட்ட கடைகளை, ஒரு கடைக்கு ரூ.80 ஆயிரம் முதல் ரூ.1 லட்சம் வரை உள்வாடகைக்கு விட்டுள்ளனர்.

வருமான இழப்பு: இதனால், கோயிலுக்கு சுமார் ரூ.20 லட்சத்துக்கு மேல் வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது.வெறும் ரூ.16 லட்சத்துக்கு ஏலம் கொடுத்துவிட்டு, விதிமுறைகளை மீறி திமுகவினர் ரூ.34 லட்சம் சம்பாதிப்பதற்காக மட்டுமே இந்த ஏலம் நடத்தப்பட்டுள்ளது.

திமுக ஆட்சியில், இந்து சமயஅறநிலையத் துறை முழுக்க முழுக்க திமுகவினர் பணம் சம்பாதிப்பதற்காக மட்டுமே பயன்படுத்தப்படுகிறதே தவிர, ஆலய மேம்பாட்டுக்குப் பயன்படுத்தப்படுவது இல்லை. அறநிலையத் துறை அமைச்சருக்கு, தனது துறையின் முறைகேடுகளை கவனிக்க நேரம் இல்லை. கட்சியில் யார் பெரியவர் என்ற போட்டியில் மட்டுமே கவனம் இருக்கிறது.

உள்வாடகைக்கு விட்டால் ஏலம் ரத்து செய்யப்படும் என்ற ஏல நிபந்தனைகளின்படி, பவானி சங்கமேஸ்வரர் கோயில் ஏலத்தை உடனே ரத்து செய்து மறுஏலம் விட வேண்டும். அறநிலையத் துறையை தாங்கள் கொள்ளையடிக்கும் துறையாக மாற்றியிருப்பதை திமுகவினர் உடனே நிறுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# புதிய டிஜிபியை நியமிக்கும் விவகாரத்தில் 3 வாரங்களுக்குள் பதில் அளிக்க வேண்டும்: தமிழக அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவு



புதுடெல்லி, நவ.09-

தமிழக டிஜிபி நியமனம் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் 3 வாரங்களுக்குள் பதில் அளிக்க தமிழக அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னையைச் சேர்ந்த கிஷோர் கிருஷ்ணசாமி சார்பில் வழக்கறிஞர் எம்.வீரராகவன் தாக்கல் செய்துள்ள நீதிமன்ற அவமதிப்பு வழக்கில், தற்போதுள்ள டிஜிபி பதவிக் காலம் முடியும் முன்னரே, அடுத்த டிஜிபிக்கான பெயர் பட்டியலை யுபிஎஸ்சிக்கு குறைந்தபட்சம் 3 மாதங்களுக்கு முன் அனுப்பி வைக்க வேண்டும். தற்காலிக டிஜிபி என யாரையும் எந்த மாநிலமும் நியமிக்கக் கூடாது எனப் பிரகாஷ் சிங் வழக்கில் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த உத்தரவை தமிழக அரசு அமல்படுத்தவில்லை.

இதற்காக தமிழக தலைமை செயலாளருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்து மதுரையைச் சேர்ந்த மனித உரிமைகள் செயல்பாட்டாளர் ஹென்றி திபேன் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம் தமிழக அரசு அனுப்பியுள்ள பெயர் பட்டியலை விரைந்து யுபிஎஸ்சி பரிசீலிக்க வேண்டும். யுபிஎஸ்சி பரிந்துரையின் பேரில் நிரந்தர டிஜிபியை தமிழக அரசு விரைந்து நியமிக்க வேண்டும் என உத்தரவிட்டது. மேலும் நீதிமன்ற அவமதிப்பு வழக்கையும் கடந்த செப்.7ம் தேதி முடித்து வைத்தது.

இந்நிலையில், யுபிஎஸ்சி பரிந்துரைத்தும் டிஜிபியை நியமிக்க தமிழக அரசு மறுத்து வருகிறது. நிரந்தர டிஜிபியை நியமிக்காமல், ஆளுங்கட்சிக்கு சாதமாக செயல்படும் வகையில் தற்காலிக டிஜிபி பணியில் தொடர்கிறார். இந்த விவகாரத்தில் கடுமையான உத்தரவுகளை பிறப்பிக்கும் வரை உச்ச நீதிமன்றத்தின் உத்தரவை தமிழக அரசு செயல்படுத்தாது.

எனவே, பிரகாஷ் சிங் வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை நடைமுறைப்படுத்தாமல் இருக்கும் தமிழக அரசின் தலைமைச் செயலருக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். பிரகாஷ் சிங் வழக்கின் தீர்ப்பின்படி விரைந்து டிஜிபியை நியமிக்க உத்தரவிட வேண்டும் என்று கிஷோர் கிருஷ்ணசாமி சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனுவை உச்ச நீதிமன்றதலைமை நீதிபதி பி.ஆர். கவாய்தலைமையிலான அமர்வு நேற்று விசாரித்தது. மனுதாரர்சார்பில் மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷண் ஆஜரானார். தமிழக அரசின் சார்பில் பதில் மனுத்தாக்கல் செய்ய அவகாசம் கோரியதை தொடர்ந்து,3 வாரங்களுக்குள் பதில் மனு தாக்கல் செய்ய நீதிபதிகள் அமர்வு உத்தரவிட்டது.

# உத்தர பிரதேச எம்எல்ஏ ராஜா பைய்யா நடத்திய 200 துப்பாக்கிக்கு ஆயுத பூஜை: விசாரணை அறிக்கை தாக்கல்



புதுடெல்லி, நவ.09-

உத்தர பிரதேச எம்எல்ஏ ராஜா பைய்யா (எ) ரகுராஜ் பிரதாப் சிங். இவர், கடந்த மாதம் ஆயுத பூஜை தினத்தில், 200 வகையான துப்பாக்கிகளுக்கு தனது மாளிகையில் பூஜை செய்தார். இதில் உள்நாட்டு, வெளிநாட்டு துப்பாக்கிகள் இடம்பெற்றன. இதுதொடர்பான வீடியோ வெளியாகி சர்ச்சையானது.

உ.பி. குண்டா தொகுதியை சேர்ந்த ராஜா பைய்யா, தனது ஜனநாயக ஜன்சத்தா தளம் கட்சியின் சார்பில் எம்எல்ஏவாக உள்ளார். இவர் துப்பாக்கிகளுக்கு ஆயுத பூஜை போட்டது தொடர்பாக அவரது மனைவி பன்வி சிங்கும் சமூக ஊடகங்களில் புகார் தெரிவித்தார். இருவரும் தற்போது பிரிந்து வாழ்கின்றனர். இவர்களது வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. மேலும், துப்பாக்கிகளுக்கு பூஜை போட்டது தொடர்பாக போலீஸ் விசாரணை நடத்த வேண்டும் என்று முன்னாள் ஐபிஎஸ் அதிகாரி அமிதாப் தாக்குரும் வலியுறுத்தினார்.

இதையடுத்து பிரதாப்கர் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் பிரிஜ்நந்தன் ராயின் உத்தரவின்படி, குண்டா தலைமை காவல் அதிகாரி அமர்நாத் குப்தா விசாரணை நடத்தினார். இந்நிலையில், விசாரணை முடிந்து நீதிமன்றத்தில் போலீஸார் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். அந்த அறிக்கையில் கூறியிருப்பதாவது:

துப்பாக்கிகளுக்கு ஆயுத பூஜை போடுவது அவர்களது குடும்ப பாரம்பரியம். அந்த நிகழ்ச்சியில் குற்றச்செயல்கள் எதுவும் நடைபெறவில்லை. ராஜா பைய்யா மீது எந்த தவறும் இல்லை. அவரது இல்லத்தில் உள்ள ஹனுமன் கோயில் வளாகத்தில் ஆயுத வழிபாடு கடந்த 30 ஆண்டுகளாக நடைபெறுகிறது. இந்த நிகழ்ச்சி மதம் மற்றும் பாரம்பரியமானது. இந்த பூஜை பாரம்பரியமாக பத்ரி ராஜ் மஹாலில் அவர்களின் மூதாதையர்களான மறைந்த ராய் பஜ்ரங் பகதூர் சிங் மற்றும் அவரது வாரிசு உதய் பிரதாப் சிங் ஆகியோரால் செய்யப்பட்டு வருகிறது. இதுவரை நடத்தப்பட்ட விசாரணையில், அன்றைய தினம் எந்த சட்டவிரோத நடவடிக்கையும் நடந்ததற்கான ஆதாரம் இல்லை. இவ்வாறு போலீஸ் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# தாந்தோணிமலை கோயில் ஆக்கிரமிப்பு நிலங்களை மீட்க நடவடிக்கை: திருத்தொண்டர் அறக்கட்டளை அறங்காவலர் தகவல்



கரூர், நவ.09-

தாந்தோணிமலை கோயில் ஆக்கிரமிப்பு நிலங்களை மீட்க நடவடிக்கை எடுக்க ப்பட்டு வருவதாக திருத்தொண்டர் அறக் கட்டளை அறங்காவலர் ஆர்.ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

கரூர் தாந்தோணிமலை கல்யாண வெங்கடரமண சுவாமி கோயிலுக்கு சொந்தமான 600 ஏக்கர் நிலம் தாந்தோணிமலை மற்றும் ஏமூர் பகுதிகளில் உள்ளது. கோயிலுக்கு சொந்தமான சுமார் 12 ஏக்கர் இனாம் நிலம் ஏமூர் பகுதியில் மனைகளாக பிரிக்கப்பட்டுள்ளது.


இன்று (நவ. 8ம் தேதி) திருத்தொண்டர் அறக்கட்டளை அறங்காவலர் ஆர்.ராதாகிருஷ்ணன் ஏமூரில் மனைகளாக பிரிக்கப்பட்ட நிலங்களை பார்வையிட்டு செய்தியாளர்களிடம் கூறியது: திருத்தொண்டர் அறக்கட்டளை மற்றும் அனைத்து சிவனடியார்கள் கூட்டமைப்பு சார்பில் கடந்த 2012ம் ஆண்டு முதல் கோயில் நிலங்களை மீட்கவும், அப்பாவி பொதுமக்கள் பாதிக்கப்படுவதை தடுக்கவும் நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம்.

நிலமோ, மனையோ வாங்கும்போது 120 ஆண்டுகளுக்கு முந்தைய ஆவணங்களை சரிபார்ப்பது அவசியம் என வலியுறுத்தி ரியல் எஸ்டேட் மாபியா வலைகளில் சிக்கவேண்டாம் என வலியுறுத்தி வருகிறோம். 2012ம் ஆண்டு முதல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கோயில் நிலங்கள் மீட்புக்குறித்து 4 ஆய்வுக் கூட்டங்களை நடத்தியுள்ளோம்.

திருக்கோயில் சொத்துக்களை மீட்க நடவடிக்கை எடுத்து வருகிறோம் ரியல் எஸ்டேட் மாபியா, பொருளாதார வலிமை, சதி, சூழ்ச்சி ஆகியவற்றிற்கு அரசு அடிமையாகி விடுகிறது. இதனால் அப்பாவி பொதுமக்கள் அநியாயமாக பாதிக்கப்படுகின்றனர். தாந்தோணிமலை கல்யாண வெங்கடரமண சுவாமி கோயிலுக்கு பூஜை உள்ளிட்ட பணிகளுக்காக 600 ஏக்கர் நிலங்கள் தானமாக வழங்கப்பட்டுள்ளன.

இந்நிலங்களை அதிகாரிகள் தனியாருக்கு பட்டா வழங்கியுள்ளனர். இவற்றை மீட்டு மீண்டும் கோயில் வசம் கொண்டு வர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தமிழகம் முழுவதும் இதுவரை 5 சதவீத கோயில் நிலங்களே மீட்கப்பட்டுள்ளன. பத்திரப்பதிவு என்பது வரி செலுத்துவதற்கான ஒரு ஆவணம் மட்டுமே. தாந்தோணிமலை கல்யாண வெங்கடரமண சுவாமி கோயிலுக்கு சொந் தமான 600 ஏக்கர் நிலங்களை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றார்.

இந்து சமய அறநிலையத்துறை வட்டாட்சியர் ராஜசேகர், தாந்தோணிமலை கோயில் பணியாளர்கள், அனைத்து சிவனடியார் கூட்டமைப்பு செயலாளர் சரவணன் உள்ளிட்டவர்கள் உடனிருந்தனர்.



# டிச.30ம் தேதி முதல் ஜன. 8 வரை: சொர்க்கவாசல் தரிசனம்

திருமலை, நவ.09-

திருப்பதி ஏழுமலையான் கோயில் தேவஸ்தான நிர்வாக அதிகாரி அனில்குமார் சிங்கால் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:

வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு டிசம்பர் 30ம் தேதி முதல் ஜனவரி 8ம் தேதி வரை பக்தர்களுக்கு சொர்க்க வாசல் தரிசன ஏற்பாடு செய்யப்படுகிறது. இதற்கு ஆன்லைன் மற்றும் நேரடி டிக்கெட் விநியோகம் குறித்து விரைவில் அறிவிக்கப்படும். வரும் பிப்ரவரி மாதம் முதல் ஆன்லைன் மூலமாகவே அங்கப்பிரதட்சண டோக்கன் தொடர்ந்து 3 மாதங்களுக்கு வழங்கப்படும்.

திருச்சானூர் பத்மாவதி தாயார் கோயிலில் வரும் நவம்பர் 17 முதல் 25ம் தேதி வரை கார்த்திகை மாத பிரம்மோற்சவம் நடைபெறும். அதற்கான பணிகள் சிறப்பாக நடந்து வருகின்றன.

ரூ.750 கோடி செலவில் மீனவர்கள், எஸ்.சி., எஸ்.டி. சமூகத்தினர் வசிக்கும் பகுதிகளில் 5,000 பஜனை கோயில்கள் கட்டப்படும். திருமலையில் பசுமை இன்னும் பலப்படுத்தப்படும். பக்தர்கள் இடைத்தரகர்களை நம்பி ஏமாறவேண்டாம் என மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

## திருச்செந்தூர் கோயில் கடற்கரையில் பக்தர்கள் தங்குவதற்கு எந்த தடையும் காவல்துறையால் அறிவிக்கப்படவில்லை: காவல்துறை விளக்கம்

தூத்துக்குடி, நவ.09-

திருச்செந்தூர் கோயில் கடற்கரையில் பக்தர்கள் தங்குவதற்கு எந்த தடையும் காவல்துறையால் அறிவிக்கப்படவில்லை எனவும் பாதுகாப்பாக தங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது எனவும் எஸ்பி ஆல்பர்ட் ஜான் விளக்கமளித்துள்ளார்.

இதுகுறித்து தூத்துக்குடி மாவட்ட காவல்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில்; "தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் சுப்பிரமணியசாமி திருக்கோவிலுக்கு வரும் பக்தர்களின் பாதுகாப்பிற்காக காவல்துறையினர் இரவு பகல் பாராமல் தொடர்ந்து பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் வடகிழக்கு பருவமழை அல்லது திடீர் கனமழையின் காரணமாக அந்த நேரத்தில் மட்டும் பொதுமக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு கடற்கரையில் தங்குவதற்கு சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு கோயில் வளாகத்தில் பாதுகாப்பாக தங்குவதற்கு அறிவுறுத்தப்படுகிறது. எனவே தற்போது கடற்கரை பகுதியில் தங்குவதற்கு எந்த விதமான தடையும் அறிவிக்கப்படவில்லை" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு மருத்துவத்துறை அமைச்சுப் பணியாளர் அலுவலக சங்கத்தின் மாநில பொறுப்புத் தலைவர் நியமனம்



நெல்லை, நவ.09-

திருநெல்வேலி மாவட்ட ஆ. செந்தில்வேல், தமிழ்நாடு மருத்துவ துறை அமைச்சுப்பணி அலுவலர் சங்கம் மாநில தலைவர் (பொ)ஆக 01.011.22025 முதல் நியமானம் செய்யப்பட்டு உள்ளார்... முன் வயது முகப்பு காரணமாக கோவை ப.தேசிங்குராஜன் மாநில தலைவர் 31.10.25 அன்று பணி ஓய்வு பெற்றமைக்காக பின் முதன்மையான துணைத்தலைவர் அவர்களை சங்க விதியின்படி நியமனம் செய்யப்பட்டுள்ளார் அவருக்கான சங்க பணி ஆணையை தலைவர் பிரப்பித்துள்ளார்... அண்ணருக்கு மருத்து பணியாளர் சங்கத்தினர்,மற்றும் தமிழ்நாடு அரசு அலுவலகம் ஒன்றியத்தின், மாவட்ட,மாநில நிர்வாகிகள் வாழ்த்துக்கள் தெரிவித்துள்ளனர்...

# பிங்க் ஆட்டோக்களை ஆண்கள் ஓட்டினால் பறிமுதல் செய்யப்படும்: சென்னை மாவட்ட ஆட்சியர் எச்சரிக்கை



சென்னை, நவ.09-

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான பிங்க் ஆட்டோக்களை ஆண்கள் ஓட்டினால் பறிமுதல் செய்யப்படும் என சென்னை மாவட்ட ஆட்சியர் எச்சரிக்கை விடுத்துள்ளார். பிங்க் ஆட்டோக்களை ஆண்கள் ஓட்டினால் ஆர்டிஓ மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என ஏற்கெனவே எச்சரிக்கை விதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.


சென்னை மாநகரில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான பாதுகா ப்பான போக்குவரத்து வசதியா கவும், பெண்க ளுக்குத் தனியாகத் தொழில் வாய்ப்பை உருவாக்கும் நோக்கத்துடனும் அரசு மானியத்துடன் இளஞ்சிவப்பு ஆட்டோ திட்டம் தொடங்கப்பட்டது.

இந்த ஆட்டோக்களைப் பெண்கள் மட்டுமே இயக்க வேண்டும் என்று திட்ட விதிமுறைகள் தெளிவாகக் கூறுகின்றன. இருப்பினும், இந்த ஆட்டோக்களை ஆண்கள் இயக்குவதாகச் சமூக நலத்துறை அதிகாரிகளுக்குப் புகார்கள் வரப்பெற்றன.

இதையடுத்து பிங்க் ஆட்டோக்களை ஆண்கள் ஓட்டினால் பறிமுதல் செய்யப்படும் என சென்னை மாவட்ட ஆட்சியர் எச்சரிக்கை விடுத்துள்ளார். "தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகளின்படி, மானிய உதவியுடன் வழங்கப்பட்ட இளஞ்சிவப்பு ஆட்டோக்களைப் பெண்கள் மட்டுமே இயக்க வேண்டும்.

விதிகள் பலமுறை எடுத்துரை க்கப்பட்ட பிறகும், தொடர்ந்து ஆண்கள் இந்த ஆட்டோக்களை இயக்குவது கண்டறியப்பட்டால், அந்த ஆட்டோக்கள் உடனடியாகப் பறிமுதல் செய்யப்பட்டு, சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்" என சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஷ்மி சித்தார்த் ஜகடே தெரிவித்துள்ளார்.

# இதற்குமுன் நடக்காத சிக்கல்... டெல்லி விமான நிலையத்தில் 800+ விமான சேவை திடீர் பாதிப்பு: என்ன காரணம்?



புதுடெல்லி, நவ.09-


இந்தியாவின் பரபரப்பான விமான நிலையங்களில் ஒன்றான டெல்லி இந்திரா காந்தி பன்னாட்டு விமான நிலையத்தில், விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அமைப்பில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, 800க்கும் மேற்பட்ட உள்நாட்டு மற்றும் சர்வதேச விமானங்களின் சேவைகள் பாதிக்கப்பட்டன. இந்தக் கோளாறு காரணமாகப் பயணிகள் பெரும் குழப்பத்துக்கு ஆளாகினர். இதனால் பயணிகள் விமான நிலையத்திலேயே காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அவர்கள் தங்கும் வசதி, உணவு வசதிகளை விமான நிலையம் ஏற்பாடு செய்தது.

இந்த விமான நிலையத்துக்கு தினமும் 1,500க்கும் மேற்பட்ட விமானங்கள் வந்து செல்கின்றன. இங்குள்ள விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுத் தரவுகளை நிர்வகிக்கும் முக்கியமான தானியங்கி செய்தி மாற்று அமைப்பு (AMSS) செயலிழந்ததே இந்தத் தாமதத்திற்குக் காரணம் என இந்திய விமான நிலைய ஆணையம் அதிகாரபூர்வமாகத் தெரிவித்துள்ளது. இப்படி ஒரு பிரச்சினை இதற்கு முன் எப்போதும் நடந்தது இல்லை என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

பொதுவாக விமானங்களின் திட்டமிடல், வழித்தட அனுமதி, வானிலை தகவல்கள் உள்ளிட்ட முக்கியச் செயல்பாட்டுச் செய்திகளை இந்த ஏஎம்எஸ்எஸ் அமைப்பு தானாகவே விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அதிகாரிகளுக்கு வழங்கும்.

இந்தத் தானியங்கி அமைப்பு செயலிழந்ததால், அதிகாரிகள் அனைத்து விமானத் திட்டங்களையும் தாங்களே கையாள வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் ஏற்பட்ட காலதாமத்ததால், விமான போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது. இந்த பிரச்சினை காரணமாக டெல்லி விமான நிலையத்தில் 800க்கும் மேற்பட்ட விமானங்கள் தாமதமானதுடன், 20 விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. இண்டிகோ, ஏர் இந்தியா, ஸ்பைஸ்ஜெட் உள்ளிட்ட முன்னணி விமான நிறுவனங்களின் சேவைகளும் இதில் அடக்கம். டெல்லியில் ஏற்பட்ட இந்தத் தொழில்நுட்ப சிக்கலின் விளைவாக, மும்பை, ஜெய்ப்பூர் போன்ற பிற மாநில விமான நிலையங்களிலும் விமானச் சேவைகள் பாதிக்கப்பட்டன.

உடனடியாக பிரச்சினையை கண்டறிந்த தொழில்நுட்ப குழுக்கள் துரிதமாகச் செயல்பட்டு, ஏஎம்எஸ்எஸ் அமைப்பைச் சீரமைக்கும் பணியில் ஈடுபட்டனர். தற்போது, ஏஎம்எஸ்எஸ் அமைப்பு மீண்டும் இயல்பு நிலைக்குக் கொண்டுவரப்பட்டு, செயல்படத் தொடங்கிவிட்டதாக இந்திய விமான நிலைய ஆணையம் அறிவித்துள்ளது. எனினும், தரவுகளில் ஏற்பட்ட தேக்கம் காரண மாகத் தானியங்கிச் செயல்பாடுகளில் சிறு தாமதங்கள் தொடரக்கூடும் என்றும், விரைவில் முழுமையான இயல்புநிலை திரும்பும் என்றும் ஆணையம் உறுதி அளித்துள்ளது. பயணிகளுக்கு ஏற்பட்ட சிரமங்களுக்காக இந்திய விமான நிலைய ஆணையம் வருத்தம் தெரிவித்துள்ளது. விமான நிறுவனங்களும் பயணிகளிடம் வருத்தம் தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளன.



## கவன ஈர்ப்பு மற்றும் காத்திருப்பு போராட்டம் நேரில் வந்து கோரிக்கைகளை கேட்டறிந்த மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர்

திருப்பூர், நவ.09-

டி ஆர் ஓ விடம் அழைத்து சென்று பேச்சு வார்த்தை நடத்தி மாவட்ட பகுதிகளிலுள்ள ஒவ்வொரு தாலுகாவிலுள்ள மாற்றுத்திறனாளிகளின் பட்டியல்களை கள ஆய்வு செய்து விரைவாக வீட்டுமனை பட்டா வழங்க வழிவகை செய்யப்படும் என உறுதி.

திருப்பூர் மாவட்ட விழுதுகள் மாற்றுதிற னாளிகள் முன்னேற்ற நலச் சங்கம் (டிசம்பர் 3 இயக்கம்) சார்பில் திருப்பூர் பல்லடம் சாலையிலுள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் முன்பாக கவன ஈர்ப்பு மற்றும் காத்திருப்பு போராட்டம் தலைவர் ரமேஷ்குமார் தலைமையில் நடைபெற்றது.

இதில் 2016 ஆம் ஆண்டு மாற்றுத்திறனாளிகள் உரிமைச்சட்டம் 2016ன் படி அரசாணையின் கீழ் இலவச வீட்டுமனை வழங்கிட கடந்த 4.ஆண்டுகளாக 13.முறைக்கு மேல் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட வருவாய்த் துறை அதிகாரியிடமும் மனுக்கள் அளித்தும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து உடனடியாக மாற்றுத்திறனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்கக்கோரி கவன ஈர்ப்பு மற்றும் காத்திருப்பு போராட்டம் நடத்தினர்.

அப்போது நேரிடையாக வந்த மாவட்ட மாற்றுத் திறனாளி நல அலுவலர் சரவணக்குமார் அவர்கள் மேற்கண்ட கோரிக்கைகள் தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்தி ஒவ்வொரு மாற்றுத்திறனாளிகளிடம் கோரிக்கைகளை கேட்டறிந்து பிறகு உடனடியாக மாவட்ட வருவாய் அலுவலர் டி ஆர் ஓ கார்த்திகேயன் அவர்களிடம் சங்க முக்கிய நிர்வாகிகளை அழைத்து சென்று, அங்கு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் மகாராஜ், உள்ளிட்டவர்களுடன் பேசி தீர்வுகண்டு உடனடியாக மாவட்டத்திலுள்ள மாற்றுத் திறனா ளிகளுக்கான வீட்டுமனை பட்டா வழங்கிட ஒவ்வொரு தாலுகா வாரிய ஆய்வு செய்து விரைவாக பட்டா வழங்கப்படும் என உறுதி அளித்தனர்.




■ திருப்பூர் வடக்கு சட்டமன்ற தொகுதி, மாநகராட்சி முன்னாள் மாமன்ற உறுப்பினர் காட்டன் முத்து அவர்களின் 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி நாளில், திருப்பூர் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கே.என்.விஜயகுமார் எம்எல்ஏ அவர்கள் காட்டன் முத்து அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி நினைவஞ்சலி செலுத்தினார். உடன் மாவட்ட விவசாய பிரிவு செயலாளர் கலைமகள் எம்.கோபால்சாமி பகுதி கழகச் செயலாளர் ஹரிஹரசுதன், 18 வது வட்டக் கழக செயலாளர்கள் காட்டன் சித்ரா, அசோக், கோல்டன் நகர் பகுதி எம்ஜிஆர் இளைஞர் அணி செயலாளர் சுரேந்தர் மற்றும் ஏராளமான நிர்வாகிகளும் பொதுமக்களும் இருந்தனர்.




■ மதுரை மேற்கு ஒன்றியம் வயலூர் ஊராட்சியில் புதுப்பிக்கப்பட்ட குளியல் தொட்டியினை சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் திறந்து வைத்து பார்வையிட்டார். அருகில் ஒன்றிய செயலாளர் தனசேகர், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பார்த்தசாரதி, முன்னாள்மாவட்ட கவுன்சிலர் சித்ராதேவிமுருகன், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் பரமேஸ்வரி செல்லமுத்து, திமுக ஒன்றிய பொருளாளர் ரவி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## டிசம்பர் 1 முதல் 19 வரை நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர்

புதுடெல்லி, நவ.09-

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் டிசம்பர் 1 முதல் டிசம்பர் 19ம் தேதி வரை நடைபெறும் என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.

இது குறித்து கிரண் ரிஜிஜு வெளியிட்ட எக்ஸ் பதிவில், "நாடாளுமன்றத்தின் குளிர்கால கூட்டத்தொடரை டிசம்பர் 1 முதல் டிசம்பர் 19 வரை கூட்டுவதற்கான மத்திய அரசின் முன்மொழிவுக்கு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு ஒப்புதல் அளித்துள்ளார். நமது ஜனநாயகத்தை வலுப்படுத்தும் மற்றும் மக்களின் விருப்பங்களை நிறைவேற்றும் ஒரு ஆக்க பூர்வமான, அர்த்தமுள்ள கூட்டத்தொடரை நான்



எதிர்நோக்குகிறேன்." என்று அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக ஜூலை 21 அன்று தொடங்கிய நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர், ஆகஸ்ட் 21 அன்று நிறைவுற்றது. இந்த கூட்டத்தொடர் 32 நாட்களில் 21 அமர்வுகளை கொண்டிருந்தது.

பிஹார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம், ஆபரேஷன் சிந்தூர், பஹல்காம் தாக்குதல் உள்ளிட்ட விவகாரங்களுக்கான விவாதம் குறித்த எதிர்க்கட்சிகளின் கோரிக்கையால் மழைக்கால கூட்டத்தொடர் தொடர்ந்து பாதிக்கப்பட்டது. இதனால் மழைக்கால கூட்டத்தொடரில் மக்களவையின் செயல்பாடு 31 சதவீதமாகவும், மாநிலங்களவையின் செயல்பாடு 39 சதவீதமாகவும் இருந்தது.

### மத்திய அரசின் கைப்பாவையாக செயல்படும் தேர்தல் ஆணையத்துக்கு கண்டனம்:

## மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 11 ந் தேதி கண்டன ஆர்ப்பாட்டம்: திமுக கூட்டணி கட்சிகள் ஆலோசனை கூட்டத்தில் தீர்மானம்

திருச்சி, நவ.09-

திருச்சி மத்திய, வடக்கு மாவட்ட தி.மு.க மற்றும் தோழமைக்கட்சிகளின் ஆலோசனை கூட்டம் இன்று (8ந்தேதி) சனிக்கிழமை தில்லை நகர் கழக முதன்மை செயலாளர் அலுவலகத்தில் மத்திய மாவட்ட செயலாளர் க.வைரமணி தலைமையில்,வடக்கு மாவட்ட செயலாளர் காடுவெட்டி தியாகராஜன் எம்.எல்.ஏ,மாநகர செயலாளர் மேயர் மு.அன்பழகன் முன்னிலையில் நடைபெற்றது.




கூட்டத்தில் திமுக சார்பில், ஒன்றியச் செயலாளர் அந்த நல்லூர் கதிர்வேல்,பகுதி செயலாளர் மோகன்தாஸ் கவுன்சிலர் நாகராஜ். வக்கீல் இளங்கோ, கமால் முஸ்தபா,மாநில பொதுக்குழு உறுப்பினர் கிராப்பட்டி செல்வம்,வட்டச் செயலாளர்கள் புத்தூர் பவுல்ராஜ், வாமடம் சுரேஷ், தனசேகரன், திருச்சி மாவட்ட காங்கிரஸ் தலைவர்கள் எல். ரெக்ஸ், திருச்சி கலை, வக்கீல் கோவிந்தராஜன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மாநில கட்டுப்பாட்டு குழு தலைவர் ஸ்ரீதர்,மாநகர் மாவட்ட செயலாளர் வெற்றிச்செல்வன், புறநகர் மாவட்ட செயலாளர் சிவராஜன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மாவட்டச் செயலாளர் சிவா, திருச்சி மாநகராட்சி கவுன்சிலர் சுரேஷ், விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் மாவட்ட செயலாளர்கள் புல்லட் லாரன்ஸ், கனியமுதன், கலைச்செல்வன், ஆற்றல் அரசு, மண்டல செயலாளர் தமிழாதன், ம.தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் வெல்ல மண்டி சோமு, பகுதி செயலாளர் ஜங்ஷன் செல்லத்துரை, ஆசிரியர் முருகன்,,மனிதநேய மக்கள் கட்சி மேற்கு மாவட்ட தலைவர் கவுன்சிலர் பைஸ் அகமது,மாவட்ட செயலாளர் இப்ராகிம்சா, மனிதநேய ஜனநாயக கட்சி மாநில இளைஞரணி செயலாளர் முகமது ஷெரீப், மாவட்டத் துணைச் செயலாளர் தர்வேஷ் பாஷா, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாவட்ட தலைவர் ஹபீபுர் ரகுமான், மாவட்ட இளைஞரணி செயலாளர் பேராசிரியர். மைதீன், அகில இந்திய பார்வர்டு பிளாக் மாவட்ட, மாநில செயலாளர் வெங்கடேசன், திராவிடர் கழக மாவட்ட தலைவர் ஆரோக்கியராஜ், ஆதித்தமிழர் பேரவை செங்கை குமுலி, மக்கள் நீதி மய்யம் மேற்கு மாவட்ட செயலாளர் சதீஷ்குமார், மாநகர செயலாளர் சீனிவாசன் உள்பட திமுக கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம் வருமாறு:

மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் வருகின்ற 11ந்தேதி (செவ்வாய் கிழமை) காலை 10 மணியளவில் மாவட்ட கலெக்டர் அலுவலகம் முன்பு எஸ்.ஐ.ஆர். கொண்டு வந்துள்ள இந்திய தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து நடைபெறவிருக்கும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை மிக சிறப்பாக நடத்தி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த பாடுபடுவது, நாட்டில் உள்ள பெரும்பான்மையான அரசியல் கட்சிகள் எஸ்.ஐ.ஆர். க்கு தொடக்க முதல் இருந்தே எதிர்ப்பு தெரிவித்தும் மத்திய அரசின் கைப்பாவையாகவும், ஏதேச்சதிகார போக்குடனும் செயல்பட்டு வரும் இந்திய தேர்தல் ஆணையத்தை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது என்பன உள்ளிட்ட பல்வேறு உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



## திருப்பூர் வடக்கு தெற்கு மாவட்ட மக்கள் நீதி மய்யம் சார்பாக பத்மஸ்ரீ கமலஹாசன் பிறந்த நாள் விழா

திருப்பூர், நவ.09-

திருப்பூர் வடக்கு தெற்கு மாவட்ட மக்கள் நீதி மய்யம் சார்பாக தலைவர் நம்மவர் டாக்டர் கமல்ஹாசன் எம்.பி அவர்களின் பிறந்தநாளை யொட்டி திருப்பூர் பழைய பேருந்து நிலையம் எதிரே பொதுமக்களுக்கு அன்னதானம், வெள்ளியங்காடு அருகில் பட்டாசு வெடித்து பள்ளி மாணவ மாணவிகளுக்கு பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில், திருப்பூர் வடக்கு மாவட்ட செயலாளர் கமல் கே.ஜீவா தெற்கு மாவட்ட செயலாளர் செ.மகேந்திரன் நற்பணி இயக்க மாவட்ட அமைப்பாளர் புகழேந்தி, மகளிரணி மாவட்ட அமைப்பாளர் தாமரைச்செல்வி, பஷீர், மாநகர செயலாளர். மாரிமுத்து, ஜெயபால், ஒன்றிய செயலாளர் செந்தில், பகவான் மணி ஆறுமுகம், தர்மராஜ், வார்டு செயலாளர் சுரேஷ், பெருமாள் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



■ கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் அவிநாசி மேற்கு ஒன்றிய செயலாளர் கணேஷ் அவர்களின் மகன் திருமூர்த்தி அவர்கள் பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் முன்னிலையில் தன்னை பாஜகவில் இணைத்துக் கொண்டார். உடன் அவிநாசி மேற்கு ஒன்றிய தலைவர் பிரபு ரத்தினம்

## திண்டுக்கல் இருப்புப்பாதை காவல் சோதனை நடத்தியதில், சுமார் 06 கிலோ கஞ்சா பறிமுதல்

கோவை, நவ.09-

கோயமுத்தூர் நாகர்கோவில் வரை செல்லும் நாகர்கோவில் எக்ஸ்பிரஸ் வண்டியில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சா மற்றும் குட்கா புகையிலைப் பொருட்கள் மற்றும் வெளி மாநில மது பாட்டில்கள் ஆகிய பொருட்களுக்கு எதிராக திண்டுக்கல் இருப்பு பாதை காவல் நிலைய ஆய்வாளர் தூய மணி வெள்ளைச்சாமி உத்தரவின் பேரில் சிறப்பு சார்பு ஆய்வாளர் மணிகண்டன்,ஏட்டு சக்தி சண்முகம், காவலர்கள் மதன்ராஜ், லோகேஷ், இளையராஜா ஆகியோர் இணைந்து நடத்திய சோதனை நடத்தினர்.




இதில் திண்டுக்கல் கரூர் ரயில் நிலையங்களுக்கு இடையே முன்னாள் உள்ள unreserved coachல் இருக்கைக்கு அடியில் கேட்பாரற்று இருந்த பேக்கை எடுத்து சோதனை செய்து பார்த்தபோது அதில் சுமார் 06 கிலோ 100 கிராம் மதிக்கத்தக்க கஞ்சா இருந்தது அவற்றை இருப்பு பாதையை காவல் நிலைய போலீசார் கைப்பற்றினர்.

## கரூர் துயரம்: தவெக பிரச்சார வாகன சிசிடிவி பதிவு, ஆவணங்கள் சிபிஐயிடம் ஒப்படைப்பு

கரூர், நவ.09-

கரூர் கூட்ட நெரிசல் கூட்ட உயிரிழப்பு தொடர்பாக தவெக பிரச்சார வாகன சிசிடிவி கேமரா பதிவு கேட்டு சிபிஐ சம்மன் வழங்கிய நிலையில், கரூர் சுற்றுலா மாளிகையில் சிபிஐயிடம் வீடியோ, ஆவணங்களை ஒப்படைக்க தவெக வழக்கறிஞர் மற்றும் நிர்வாகிகள் ஆஜராகினர்.



கரூர் வேலுசாமிபுரத்தில் கடந்த செப். 27ம் தேதி நடந்த தவெக பிரச்சாரக் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். 100க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இவ்வழக்கை விசாரித்து வரும் சிபிஐ இதுதொடர்பாக 300க்கும் மேற்பட்டவர்களுக்கு சம்மன் அனுப்பி அக்.30ம் தேதி முதல் விசாரணை நடத்தி வருகிறது.

மேலும், சம்பவம் நடந்த கரூர் வேலுச்சாமிபுரம் சாலையை 3டி லேசர் ஸ்கேனர் கருவி மூலம் 2 நாட்கள் அளவீடு செய்யும் பணிகளை மேற்கொண்டனர். அன்றைய தினம் வேலுச்சாமிபுரத்தில் உள்ள கடைகள், அலுவலகங்கள், நிறுவனங்கள் ஆகிய இடங்களுக்கு சென்று சிசிடிவி கேமரா உள்ள இடங்களில் அதன் பதிவுகளை கேட்டும், பிற இடங்களில் இச்சம்பவம் குறித்து விசாரணையும் நடத்தினர்.

நவ. 2ம் தேதி கரூர் காமராஜபுரத்தில் ராம்குமார் என்பவரை தேடிச் சென்ற சிபிஐ குழுவினர் அன்றிரவு சென்னை சென்று சென்னை பனையூரில் உள்ள தவெக அலுவலகத்தில் பிரச்சார வாகனத்தில் சிசிடிவி கேமரா பதிவுகள், நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் விவரங்களையும், ராம்குமார் குறித்தும் கேட்டு விசாரணை நடத்தி சம்மன் அளித்தனர். இந்த விவரங்கள் 3 நாட்களில் அளிக்கப்படும் என தவெக நிர்வாகி நிர்மல்குமார் தெரிவித்திருந்தார்.

தவெக பிரச்சார கூட்டத்தில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த உள்ளூர், வெளி மாவட்ட போலீஸாரிடம் நவ. 4, 5 ஆகிய இரு நாட்கள் விசாரணை மேற்கொண்டனர். இந்நிலையில் கரூர் சுற்றுலா மாளிகையில் கடந்த 3 நாட்களாக ஆம்புலன்ஸ் உரிமையாளர்கள், ஓட்டுநர்கள் என 20க்கும் மேற்பட்டவர்களிடம் சிபிஐ அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். இதில் சிலரிடம் தொடர்ந்து 3 நாட்களாக விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் கரூர் சுற்றுலா மாளிகையில் இன்று (நவ.8ம் தேதி) தவெக வழக்கறிஞர் அரசு உள்ளிட்ட நிர்வாகிகள் 3 பேர் பிரச்சார வாகனத்தின் சிசிடிவி கேமரா பதிவுகள் அடங்கிய வீடியோக்கள், நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் விவரங்கள் அடங்கிய ஆவணங்களை ஒரு பையில் வைத்து எடுத்துச் சென்று சிபிஐ அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

# சொந்த கட்சியினரால் அல்லது மக்களால் திமுக அழியும்: தமிழிசை சவுந்தரராஜன் விமர்சனம்



சென்னை, நவ.09-

'சொந்த கட்சியினரால் அல்லது மக்களால் திமுக அழியும்' என பாஜக முன்னாள் மாநில தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்தார். வந்தே மாதரம் பாடலின் 150வது ஆண்டு கொண்டாட்டம் நாடு முழுவதும் நேற்று நடந்தது. தமிழக பாஜக சார்பில் சென்னை மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயில் அருகில் நடைபெற்ற விழாவுக்கு பாஜக முன்னாள் மாநில தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் தலைமை வகித்தார்.

மாநில துணைத் தலைவர் கரு.நாகராஜன், செய்தி தொடர்பாளர் ஏ.என்.எஸ் .பிரசாத் உள்பட பாஜக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில், பிரதமர் மோடியின் 'சுயசார்பு இந்தியா'வை வலியுறுத்தும் விதமாக சுதேசி உறுதிமொழியை ஏற்றுக் கொண்டனர். பின்னர், அனைவரும் வந்தே மாதரம் பாடலைப் பாடினர். தொடர்ந்து, பொதுமக்களுக்கு தமிழிசை சவுந்தரராஜன் இனிப்பு வழங்கினார். அப்போது செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: சுதேசி உறுதிமொழியை எடுத்ததன் மூலம், அந்நிய பொருட்களை தவிர்த்து, சுதேசி பொருட்களைப் பயன்படுத்த போகிறோம்.

மேலும், சுதேசி செயலியை பயன்படுத்த போகிறோம். அதாவது, அனைவரும் பயன்படுத்தும், வாட்ஸ்அப் இப்போது 'அரட்டை' யாக மாறிக் கொண்டிருக்கிறது. 'விதேசி'களை விடுத்து 'சுதேசி' களை ஆதரிக்கும் இயக்கங்களாக அனைத்து இயக்கங்களும் மாற வேண்டும். அதுதான் பிரதமரின் நோக்கம். நேரு, மன்மோகன் சிங், நரசிம்மராவ் காலத்திலும் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் நடத்தப்பட்டுள்ளது. ஆனால், மோடி காலத்தில் நடத்தினால் மட்டும், போராட்டம் நடத்த போகிறோம் என இண்டியா கூட்டணியினர் தெரிவித்துள்ளனர்.

2 ஆண்டுகளாக கஷ்டப்பட்டு சேர்த்த பொய் வாக்காளர்கள் அனைவரும் போய் விடுவார்கள் என்ற கவலை திமுகவுக்கு ஏற்பட்டு விட்டதா?ஜனநாயகத்தை காக்க எதை வேண்டுமானாலும் செய்ய வேண்டும் என சொல்லும் ஸ்டாலின், முதலில் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தத்தை ஒப்புக்கொள்ள வேண்டும். கோவை முழுவதும் ஓலக் குரல் ஒலித்து கொண்டிருக்கிறது. திமுகவை சார்ந்தவர்களால்தான் திமுக அழியப்போகிறது. இல்லையென்றால், மக்களால் திமுக அழியும். இவ்வாறு அவர் கூறினார்.

# காந்தி கிராம பல்கலையில் பயிலும் மாணவர்களுக்கு அடையாள அட்டையுடன் கூடிய ஏடிஎம் அட்டை வழங்கப்பட்டது : காந்திகிராம பல்கலை துணை வேந்தர் என்.பஞ்சநதம் வழங்கினார்



சின்னாளபட்டி, நவ.9-

காந்தி கிராம பல்கலையில் பயிலும் மாணவர்களுக்கு அடையாள அட்டையுடன் கூடிய ஏடிஎம் அட்டை வழங்கும் நிகழ்ச்சியில், காந்தி கிராம பல்கலை துணை வேந்தர் என்.பஞ்சநதம் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு, மாணவ மாணவியருக்கு அடையாள அட்டை வழங்கினார்.

உயர்கல்வித் துறையில் எண்ம பயண்பாட்டு முறைமை மற்றும் கூட்டுறவு ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் முக்கியமான முன்னேற்றமாக, காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழத்துடன் திண்டுக்கல் மத்திய கூட்டுறவு வங்கி (டிசிசிபி) மற்றும் தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி (டி.என்.எஸ்.சி வங்கி) ஆகியவற்றுடன் இணைந்து மாணவர் அடையாள அட்டை மற்றும் ஏடிஎம் இணைந்த அட்டை ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. அரசு முன்னெடுத்து வரும் கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்தும் முயற்சிகளுடன் இணைந்து மற்றும் 2025 ஆம் ஆண்டிற்கான சர்வதேச கூட்டுறவு ஆண்டு நினைவாக நடைபெறுவதால், கல்வி நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு வங்கிகளின் புதுமையான இணைப்பில் கூட்டுறவுத்துறை செயல்படுத்தி வருவது ஒரு முக்கிய மைல் கல்லாகும். தமிழ்நாட்டிலுள்ள மத்திய நிதி உதவி பெறும் பல்கலைக்கழகங்களில் இதுவே முதல் முறையாக, ஒவ்வொரு முதல் ஆண்டு மாணவருக்கும் பூஜ்ய இருப்புச் சேமிப்பு கணக்குடன் இணைக்கப்பட்ட நிறுவன அடையாள அட்டை வழங்கப்படுகிறது. இது டிஜிட்டல் அதிகாரமளிப்பு மற்றும் இளைஞர் ஈடுபாட்டுக்கான கூட்டுறவு வழி முன்மாதிரியாக விளங்குகிறது. இந்த புதிய அட்டை, மாணவர்களுக்கு அதிகாரப்பூர்வ அடையாள அட்டை மற்றும் ஏடிஎம் டெபிட் அட்டை என இரட்டைக் கடமையுடன், பணமில்லா பரிவர்த்தனைகள், ஆன்லைன் கட்டணங்கள், மற்றும் டிஜிட்டல் வங்கி சேவைகளை வழங்கும் வகையில் இந்த அட்டை வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நிதி விழிப்புணர்வு, சுயநம்பிக்கை, மற்றும் கூட்டுறவு மதிப்புகள் மாணவர்களிடையே ஊக்குவிக்கப்படுகின்றன இது காந்திய சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்ட ஜிஆர்ஜயின் கல்வி நோக்கத்துடன் இணைந்ததாகும். இதன் அறிமுக விழா நிகழ்ச்சிக்கு பல்கலை துணை வேந்தர் ந.பஞ்சநதம் தலைமை தாங்கினார். பல்கலை நிதி அலுவலர் மற்றும் இயக்குநர் பேராசிரியர் டாக்டர் கே. ரவிச்சந்திரன் வரவேற்புரை ஆற்றினார், பல்கலைதுணைவேந்தர், தலைமை உரையாற்றி மாணவர்களுக்கு அடையாள அட்டையுடன் கூடிய ஏ.டி.எம். இணைந்த அட்டையை வழங்கினார் நிகழ்ச்சியில் டாக்டர் எம். சுந்தரமாரி, பதிவாளர் (பொறுப்பு), பேராசிரியர்கள் ஏ.பாலகிருஷ்ணன், ஆர்.சுபாஷினி, எஸ்.மீனாட்சி, கே.எஸ்.புஷ்பா எஸ்.மணிவேல் கே.பி. இளங்கோ கே.மாரிமுத்து உட்பட பல்கலை பேராசிரியர்கள், துறைத்தலைவர்கள் பலர் கலந்துகொண்டனர். நிறைவாக கணிணி மைய இயக்குநர் டாக்டர் என். பழனியப்பன் நன்றி கூறினார்.

# செங்கோட்டையன் விவகாரத்திலும் திமுக பின்னணியில் இருக்குமோ என்ற சந்தேகம் உள்ளது: நயினார் நாகேந்திரன் கருத்து



திருப்பூர், நவ.09-


செங்கோட்டையன் விவகாரத்திலும் திமுக பின்னணியில் இருக்குமோ என்ற சந்தேகம் உள்ளது என்று பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் கூறினார். திருப்பூர் மாவட்டம் காங்கயம் அருகே தொட்டிபாளையம் பகுதியில் உள்ள தனியார் பள்ளியில் 'வந்தே மாதரம்' 150வது ஆண்டு தின நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

இதில் பங்கேற்ற நயினார் நாகேந்திரன், பின்னர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: பாஜக கூறிய பிறகே, அதிமுகவை ஒருங்கிணைப்பது தொடர்பாக பல்வேறு விஷயங்களை தான் முன்னெடுத்ததாக செங்கோட்டையன் கூறியுள்ளார். மேலும், 6 பேர் அதிமுகவை ஒன்றிணைக்கச் சென்றோம் என்றும் தெரிவித்துள்ளார்.

அந்த 6 பேர் யார் என்று தெரியவில்லை. பாஜகவில் யாரிடம் சென்று கூறினார்கள் என்பதையும் செங்கோட்டையன் கூறவில்லை. எனவே, இதுகுறித்து நான் கருத்து கூறினால் தவறாகப் போய்விடும். ஏற்கெனவே மனோஜ் பாண்டியன் திமுகவில் இணைந்துள்ளார். எனவே, செங்கோட்டையன் விவகாரத்தின் பின்னணியிலும் திமுக இருக்குமோ என்ற சந்தேகம் உள்ளது.

கோவை இளம்பெண் கூட்டு பாலியல் வன்கொடுமை சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்கள் மீது காவல் துறையும், அரசும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யாராவது நம்புவாவர்களா? பாஜக பெரிய கட்சி. ஆனால், நடிகர் விஜய் இன்னும் கவுன்சிலர்கூட ஆகவில்லை. கட்சி தொடங்கிய உடனேயே எங்களுக்கும், திமுகவுக்கும்தான் போட்டி என கூறுகிறார். இதை யாராவது நம்புவாவர்களா? இவ்வாறு அவர் தெரிவித்தார்.



# திருச்செந்தூர் கோயிலில் தரிசன முன்பதிவு ஏற்படுத்த வழக்கு - உயர் நீதிமன்றம் நோட்டீஸ்

மதுரை, நவ.09-

திருச்செந்தூர் கோயிலில் தரிசன முன்பதிவு திட்டத்தை நிறைவேற்றக் கோரிய மனுவுக்கு இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பதிலளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை புழுதிவாக்கத்தைச் சேர்ந்த ராஜேஷ், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில்: திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு செல்லும் பக்தர்கள் சிறப்பு தரிசன டிக்கெட் பெற 5 முதல் 7 மணி நேரம் வரை நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டியதுள்ளது. பக்தர்கள் வரிசையில் காத்திருக்கும் இடத்தில் மேற்கூரை, குடிநீர், அமர்வதற்கு இருக்கை போன்ற வசதிகள் செய்யப்படாததால் முதியோர், மாற்றுத் திறனாளிகள், பெண்கள், குழந்தைகள் மிகுந்த சிரமத்துக்கு ஆளாகி வருகின்றனர்.

இதனால் பக்தர்களுக்கு டோக்கன் வழங்கி குறிப்பிட்ட நேரத்தில் தரிசனத்துக்கு அனுமதிப்பது, நேர முறையில் தரிசனம் செய்ய ஆன்லைனில் கட்டணம் செலுத்தி முன்பதிவு செய்யும் வசதியை ஏற்படுத்துவது, முதியோர், மாற்றுத் திறனாளிகளுக்கு என சிறப்பு கவுன்ட்டர்கள் திறப்பது, தரிசனத்துக்காக தனி பாதையை ஏற்படுத்துவது, பக்தர்கள் கூட்டத்தை முறைப்படுத்த அதிக பணியாளர்களை நியமனம் செய்தல், பக்தர்கள் வரிசை செல்லும் இடத்தில் குடிநீர், மேற்கூரை, கழிவறை, மருத்துவ வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்தக்கோரி கோயில் அதிகாரிகளிடம் மனு அளிக்கப்பட்டது. ஆனால், மனு மீது இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே, திருச்செந்தூர் கோயிலில் தரிசன முன்பதிவு மற்றும் தரிசன வரிசையை ஒழுங்குபடுத்துதல் மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த உத்தரவிட வேண்டும் என்று மனுவில் கூறப்பட்டிருந்தது. மனுவை நீதிபதிகள் அனிதா சுமந்த், குமரப்பன் அமர்வு விசாரித்து, மனு தொடர்பாக இந்து சமய அறநிலையத் துறை ஆணையர், திருச்செந்தூர் கோயில் அறங்காவலர் குழு தலைவர், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் ஆகியோர் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை 4 வாரங்களுக்கு தள்ளிவைத்தது.

# மயிலாடுதுறை மாயூரநாதர், வதானேஸ்வரர் கோயில்களில் துலா உற்சவ கொடியேற்றம்



மயிலாடுதுறை, நவ.09-

மயிலாடுதுறை துலாக் கட்ட காவிரியில் ஆண்டு தோறும் ஐப்பசி மாதம் முழுவதும் துலா உற்சவம் நடத்தப்பட்டு வருகிறது. மாதம் முழுவதும் தினமும் சிவன் கோயில்களிலிருந்து சுவாமிகள் புறப்பாடு செய்யப்பட்டு, துலாக்கட்ட காவிரியில் தீர்த்தவாரி நடைபெறும். ஐப்பசி கடைசி நாள் நடைபெறும் கடைமுக தீர்த்தவாரி வைபவத்தை முன்னிட்டு நேற்று மயிலாடுதுறை கோயில்களில் துலா உற்சவ திருக்கொடியேற்றம் நடைபெற்றது.

மாயூரநாதர் கோயிலில் ரிஷப கொடி கோயிலின் நான்கு வீதிகளையும் வலம் வந்து, கோயில் கொடி மரத்துக்கு எடுத்து வரப்பட்டது. தொடர்ந்து அபயாம்பிகை சமேத மாயூரநாதர் சுவாமி பஞ்சமூர்த்திகளுடன் சிறப்பு அலங்காரத்தில் கொடிமரம் முன்பு எழுந்தருளியதும், திருவாவடுதுறை ஆதீன கட்டளை சங்கரலிங்க தம்பிரான் சுவாமிகள் முன்னிலையில், கொடிமரத்துக்கு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு கொடியேற்றம் செய்யப்பட்டு, மகா தீபாராதனைக் காட்டப்பட்டது.

தொடர்ந்து கோயிலின் நான்கு பிரகாரங்களில் கொடியேற்றப்பட்டது. இதில் கோயில் கண்காணிப்பாளர் குருமூர்த்தி உள்ளிட்ட பக்தர்கள் பலர் கலந்துகொண்டனர். இதே போல, வதானேஸ்வரர் கோயிலில் தருமபுரம் ஆதீன கட்டளை விசாரணை ஸ்ரீமத் சிவகுருநாத தம்பிரான் சுவாமிகள் முன்னிலையில் கொடியேற்றம் நடைபெற்றது. மேலும், தெப்பக்குளம் காசி விஸ்வநாதர், மார்க்கெட் காசி விஸ்வநாதர் உள்ளிட்ட கோயில்களில் துலா உற்சவ கொடியேற்றம் நடைபெற்றது.

# குளியல் அறையில் கேமரா பொருத்திய விவகாரம்: வடமாநில பெண் தொழிலாளியின் ஆண் நண்பர் டெல்லியில் கைது

ஓசூர், நவ.09-

தனியார் தொழிற்சாலை பெண்கள் விடுதி குளியல் அறையில் ரகசிய கேமரா பொருத்திய விவகாரத்தில் கைதான பெண்ணின் ஆண் நண்பர் டெல்லியில் கைது செய்யப்பட்டார். கிருஷ்ணகிரி மாவட்டம் கெலமங்கலம் அருகே நாகமங்கலத்தில் உள்ள தனியார் தொழிற்சாலையில் பணிபுரியும் பெண் தொழிலாளர்கள் தங்குவதற்காக லாளிக்கல் பகுதியில் விடுதி கட்டப்பட்டுள்ளது. இங்கு 6 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தங்கியுள்ளனர்.

இந்நிலையில், கடந்த 1ம் தேதி விடுதியில் உள்ள ஒரு அறையின் குளியல் அறையில் ஒடிசாவைச் சேர்ந்த நீலுகுமாரி குப்தா (22) என்ற பெண் தொழிலாளி ரகசியகேமரா பொருத்தியது தெரியவந்தது. பின்னர் நீலுகுமாரியை போலீஸார் கைது செய்தனர். அவரது ஆண் நண்பரான, பெங்களூருவில் ஓட்டுநராகப் பணிபுரிந்து வரும் ஒடிசாவைச் சேர்ந்த ரவி பிரதாப்சிங் என்பவர் கேமராவைப் பொருத்தச் சொன்னது தெரியவந்தது.

இதற்கிடையில், ரவி பிரதாப் சிங் ஜார்க்கண்ட மாநிலத்துக்கு தப்பிச் சென்றது தெரியவந்தது. இதையடுத்து, உத்தனப்பள்ளி போலீஸார் ஜார்க்கண்ட் மாநிலத்துக்குச் சென்றபோது, ரவி பிரதாப் சிங் டெல்லிக்கு தப்பியோடியது தெரிந்தது. நேற்று காலை டெல்லி சென்ற போலீஸார், ரவி பிரதாப் சிங்கை கைது செய்து, விமானம் மூலம் உத்தனப்பள்ளிக்கு அழைத்து வந்தனர். அவரிடம் தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. இதனிடையே, தனியார் தொழிற்சாலை நிர்வாகம் சார்பில் டெல்லி, பெங்களூருவில் இருந்து வந்த 10 பேர் கொண்ட சிறப்புக் குழுவினர், விடுதி அறைகளில் 2வது நாளாக ரகசிய கேமரா பொருத்தப்பட்டுள்ளதாக என்று ஆய்வு செய்தனர். மேலும், 3 நாட்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த பெண்கள் நேற்று போரா ட்டத்தைக் கைவிட்டனர். அதேநேரத்தில், விடுதியில் தங்கியிருந்த பெண்களில் பலரை, அவர்களது பெற்றோர் வந்து, வீட்டுக்கு அழைத்துச் சென்றனர்.


# போதைப் பொருள் பயன்பாட்டை எதிர்த்து திருச்சியில் இருந்து மதுரை வரை ஜன.2ல் வைகோ நடைபயணம் தொடக்கம்

சென்னை, நவ.09-

போதைப் பொருட்கள் பயன்பாட்டை எதிர்த்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் திருச்சியில் இருந்து மதுரை வரை ஜன. 2-ம் தேதி மதிமுக பொதுச் செயலாளர் வைகோ நடைபயணம் தொடங்குகிறார்.

இதுதொடர்பாக சென்னையில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: லட்சக்கணக்கான வாக்காளர்களின் வாக்குரிமையைப் பறிக்கும் முயற்சிக்கு எதிராக நவ.11ல் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில், மதிமுகபெருமளவில் பங்கேற்கும். தமிழகத்தில் போதைப் பொருளுக்கு எதிராக ஜன.2ம்தேதி திருச்சியில் இருந்து நடைபயணமாக புறப்பட்டு மணப்பாறை, திண்டுக்கல் வழியாக ஜன.12ம் தேதி மதுரையை அடைந்து எங்களது பயணத்தை நிறைவு செய்ய திட்டமிட்டுள்ளோம்.

# வேலை வாங்கித் தருவதாக கூறி பணமோசடி செய்ததாக வழக்கு: சிறப்பு நீதிமன்றத்தில் செந்தில் பாலாஜி ஆஜர்



சென்னை, நவ.09-

போக்குவரத்து துறையில் வேலை வாங்கித்தருவதாகக் கூறி பணமோசடி செய்ததாக பதியப்பட்ட வழக்கில் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி சென்னை சிறப்பு நீதிமன்றத்தில் நேற்று நேரில் ஆஜரானார்.

கடந்த 2011 15 அதிமுக ஆட்சிக்காலத்தில் போக்குவரத்துத் துறை அமைச்சராகப் பதவி வகித்த செந்தில் பாலாஜி, போக்குவரத்துக் கழகங்களில் வேலை வாங்கித்தருவதாகக் கூறி பலரிடமும் பணம் பெற்று மோசடியில் ஈடுபட்டதாக சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீஸார் 3 வழக்குகளைப் பதிவு செய்தனர்.

இந்த வழக்கில் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியுடன் சேர்த்து மொத்தம் 2,222 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்த வழக்கு விசாரணை சென்னை எம்.பி, எம்எல்ஏக்கள் மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. இந்த வழக்கு விசாரணைக்காக கடந்த ஜன.6ம் தேதி முதல் குற்றம்சாட்டப்பட்ட அனைவருக்கும் சம்மன் அனுப்பி விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இந்த வழக்கு சிறப்பு நீதிமன்றத்தில் நீதிபதி சஞ்சய் பாபா முன்பாக நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, செந்தில் பாலாஜி நேரில் ஆஜரானார். அதைப்பதிவு செய்து கொண்ட நீதிபதி, இந்த வழக்கில் மேலும் 50 பேருக்கு புதிதாக சம்மன் அனுப்ப உத்தரவிட்டு விசாரணையை நவ.12க்கு தள்ளிவைத்துள்ளார்.

# 2011ல் செய்த தவறுக்கு இப்போது அனுபவிக்கிறார் ஓபிஎஸ்! வைகோ விமர்சனம்



சென்னை, நவ.09-

முன்னாள் முதல்வர் ஓபிஎஸ் கடந்த 2011 சட்டப்பேரவை தேர்தல் சமயத்தில் செய்த தவறுக்கான பலனை தற்போது அனுபவித்து வருவதாக மதிமுக பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்தார்.

மதிமுக நிர்வாக குழு கூட்டம் சென்னை எழும்பூரில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. அவைத் தலைவர் அர்ஜூனன்ராஜ் தலைமை தாங்கினார். பொதுச்செயலாளர் வைகோ, பொருளாளர் மு.செந்திலதிபன், முதன்மைச் செயலாளர் துரை வைகோ எம்பி உள்ளிட்டோர் பங்கேற்றனர். இக்கூட்டத்தில் பிஹாரில் நடந்த வாக்காளர் திருத்தப் பட்டியலில் நடந்த முறைகேடுகளை தமிழகத்திலும் செயற்படுத்த முனைந்துள்ள தேர்தல் ஆணையத்தின் முயற்சிகளை அனைத்துக் கட்சிகளும் முறியடிக்க வேண்டும். அரசியல் கட்சிகளின் சாலைப் பேரணி மற்றும் பொதுக்கூட்டங்களுக்கு பரிந்துரை செய்துள்ள விதிகளை அரசு மாற்றி அமைக்க வேண்டும் உட்பட 5 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பின்னர் கூட்டத்தில் வைகோ பேசியதாவது: கடந்த 2011 சட்டப்பேரவை தேர்தல் சமயத்தில், அதிமுகவிலிருந்து கூட்டணி பேச்சுவார்த்தைக்காக முன்னாள் முதல்வர் ஓபிஎஸ், முன்னாள் அமைச்சர்கள் செங்கோட்டையன், ஜெயக்குமார் உள்ளிட்டோர் மதிமுக அலுவலகத்துக்கு வந்தனர். அப்போது 12 தொகுதிகள் தருவதாக கூறினர். அதை ஏற்க மறுத்து, "மாலை5 மணி வரை காத்திருக்கிறோம். ஜெயலலிதாவிடம் பேசிவிட்டு நல்ல பதிலைக் கூறுங்கள்" என ஓபிஎஸ் உள்ளிட்டோரிடம் கூறி அனுப்பினேன்.

ஆனால், மாலை 5 மணி வரை காத்திருப்பதாக கூறியதை வைகோ கூட்டணிக்கு வர தயாராக இல்லை என ஜெயலலிதாவிடம் ஓபிஎஸ் உள்ளிட்டோர் பொய்யாகக் கூறிவிட்டனர். இதனால் அதிமுக கூட்டணியில் மதிமுக இடம்பெறவில்லை. அந்த தேர்தலில் 15 தொகுதிகளும், ஒரு ராஜ்யசபா சீட்டும் தர ஜெயலலிதா தயாராக இருந்தது பிறகு தான் எனக்கு தெரியவந்தது. 2011 ல் கூட்டணி விவகாரத்தில் ஓபிஎஸ் செய்த தவறுக்கு தற்போது பலனை அனுபவிக்கிறார்.

கரூர் கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்தபோது ஒரே ஓட்டமாக சென்னைக்கு ஓடி வந்த தவெக தலைவர் விஜய், நிதி கொடுக்கிறேன் எல்லோரும் என்னை பார்க்க வாருங்கள் என்று அழைத்து தமிழக வரலாற்றில் யாரும் செய்யாத பித்தலாட்டத்தனத்தை செய்திருக்கிறார். இவ்விவகாரத்தில் முதல்வர் அரசியல் செய்ய வேண்டாம் என்றார். ஆனால், நாங்கள் தான் ஆட்சிக்கு வருவோம். திமுகவுக்கும் எங்களுக்கும் தான் போட்டி என சகட்டு மேனிக்கு விஜய் பேசுகிறார். அரசியலில் ஆத்திச்சூடி கூட அறியாத விஜய்,ஆட்சிக்கு வந்து தற்போதே முதல்வர் ஆகிவிட்டது போல கனவுலகத்தில் மிதந்து கொண்டிருக்கிறார். இவ்வாறு அவர் பேசினார்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000